பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

17 12 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஒரே நாடு – ஒரே தேர்தல் அரசியல் சாசன திருத்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது.
2. மழை நீர் சேகரிப்பில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தனது பங்களிப்பை உறுதி செய்ய வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
3. தமிழகத்தில் மீனவர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

4, வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அவர் கூறினார்.

5. நவி மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சகாஜா யாமளபள்ளி - ஜப்பானின் **Hiroko** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

ஒரே நாடு – ஒரே தேர்தல் அரசியல் சாசன திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, இது குறித்து முடிவெடுக்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதாவை கொண்டு வருவதற்கு ஆதரவாக 269 உறுப்பினர்களும், எதிராக 198 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதனையடுத்து இம்மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெஹ்வால் மக்களவையில் தாக்கல் செய்தார்.

மசோதாவுக்கு காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் உத்தவ் தாக்ரே தலைமையிலான சிவசேனா ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இம்மசோதாவை கூட்டு நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

இதனை எற்க மறுத்த அமைச்சர் திரு அர்ஜூன்ராம் மெஹ்வால், அரசியல் சாசனத்தின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிராக இந்த மசோதா அமையவில்லை என்று விளக்கம் அளித்தார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத்கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒரே நாடு – ஒரே தேர்தல் என்பது குறித்து விரிவாக பல்வேறு தரப்பினரிடம் ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ததாக தெரிவித்தார்.

அரசியல் சட்ட நிபுணர்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

முன்னதாக பேசிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா மத்திய அமைச்சரவையின் பரிசீலனைக்கு வரும்போதே இதனை கூட்டு நாடாளுமன்ற குழு பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியதை சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மத்திய சட்ட அமைச்சா திரு அர்ஜூன்ராம் மெஹ்வால் இதனை கூட்டு நாடாளுமன்ற குழு பரிசீலனைக்கு அனுப்ப பரிந்துறை செய்தார்.

**[]<<<>>>[]**

மழை நீர் சேகரிப்பில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தனது பங்களிப்பை உறுதி செய்ய வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலை, மின்சாரம், ரயில்வே மற்றும் நீர் பாசன திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய பிரதமர், ஒவ்வொரு துளி நீரும் பூமி தாயின் தாகத்தை தணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மக்கள் பங்களிப்புடன் மழைநீர் சேகரிப்பு திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வருவதையும் பிரதமர் சுட்டிக்காட்டினர்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாததால் பெரும் இன்னலுக்கு மக்கள் ஆளானதாக அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள பிஜேபி அரசு நதிநீர் தாவாக்களுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முழுவீச்சில் எடுத்து வருவதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு முதல் தேசிய தேர்வுகள் முகமை உயர்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை மட்டுமே நடத்தும்  என மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியளர்களிடம் பேசிய அவர், தேசிய தேர்வு முகமையை மறுசீரமைக்கும் வகையில் மேலும் பத்து புதிய பதவிகளை உருவாக்க உள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவ படிப்பில் சேருவதற்கான இளநிலை நீட் தேர்வை ஆன்லைன் மூலமாக நடத்துவது குறிதது சுகாதாரத்துறை அமைச்சகத்துடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

வரும் நாட்களில் நுழைவுத் தேர்வுகளை கணினி வழியாகவும், புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும் நடத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மீனவர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.,

சென்னை சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மீனவர் குடியிப்புகளில் நடைபெற்ற குறைதீர்ப்பு முகாமில் பங்கேற்று பேசிய அவர், முதலமைச்சருடன் ஆலோசித்து பட்டா நிலத்திற்கு மட்டும்தான் மின் இணைப்பு என்ற விதிகளை தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மீன் வலைகளை உலர்த்துவதற்கான அரங்கம், தூண்டில் வளைவு அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

திமுக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களையும் திரு மா சுப்ரமணியன் எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

சென்னை அண்ணாசாலையில் ஐந்து கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் கோலம் விற்பனை நிலையத்தை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

கோ-ஆப்டெக்ஸின் பொங்கல் திருநாள் சிறப்பு தள்ளுபடி விற்பனையையும் அவர் தொடங்கி வைத்தார்.

நடப்பு ஆண்டில் பொங்கல் பண்டிகைக் காலத்தில் 50 கோடி ரூபாய் சிறப்பு விற்பனை இலக்கை எட்டுவதற்கு கோ-ஆப்டெக்ஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து பட்டு மற்றும் பருத்தி ரகங்களுக்கு 30 சதவீத சிறப்பு தள்ளுபடியுடன் பொங்கல் திருநாள் சிறப்பு விற்பனை மேற்கொள்ளப்படும் என்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சென்னை தாம்பரத்தில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இன்று வெளியிடப்பட்ட அரசின் செய்திக்குறிப்பில், உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டதின்கீழ் எட்டு கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் உட்புற அணுகுசாலைகள் மழைநீர் வடிகால், அதிகப்படியான தண்ணீரை சேமித்து வைக்கும் தொட்டி உள்ளிட்ட வசதிகள் மேம்படுத்தப்படுத்தப்பட உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் மாநிலத்தின் வடகடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக அவர் கூறினார்.

கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் மீனவர்கள் அடுத்த மூன்று நாட்களுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை அடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை

மாவட்டத்தின் வேம்பார் முதல் பெரியதாழை வரையிலான கடலோரப் பகுதிகளில் மீன்பிடி படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டத்தில் நாளை நடைபெறவுள்ள உங்களைத் தேடி உங்கள் ஊரில் முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சியர் திருமதி உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

திருநெல்வேலியில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு திருக்குறள் வினாடி வினா போட்டி வரும் 21-ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.,

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நுகர்வோர் உரிமைகள் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் பழனியிலிருந்து அறுபடை வீடுகளுக்கு இந்து அறநிலையத்துறை சார்பில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான இலவச ஆன்மீக சுற்றுலா பயணம் இன்று தொடங்கியது.

**[]<<<>>>[]**

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில ஒன்றான சோழவரம் ஏரியில் பராமரிப்பு பணி நடைபெற்று வருவதால் அணையிலிருந்து வினாடிக்கு 120 கன அடி வீதம் உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

**[]<<<>>>[]**

சென்னை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் படையில் பணி புரிவோருக்கான குறைதீர்க்கும் முகாம் இம்மாதம் 27-ஆம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நவி மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சகாஜா யாமளபள்ளி - ஜப்பானின் **Hiroko** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 4-6, 10-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - பூஜா இங்ளே இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா, ரியா பாட்டியா, ஸ்ரீவள்ளி ராஷ்மிகா ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி ஏழு மணிக்கு தொடங்குகிறது.,

***End of News***